# மெட்ரோ பயணியருக்காக மகிழுந்து சேவை துவக்கம்

**சென்னை, ஆக. 26–**

மெட்ரோ ரயில் பயணியர் வசதிக்காக, சின்னமலையில் இருந்து தரமணி வரை, குளிர்சாதன மகிழுந்து சேவையை, மெட்ரோ நிர்வாகம் துவங்க உள்ளது.

சென்னை, விமான நிலையத்தில் இருந்து வண்ணாரப்பேட்டை வரையிலும், பரங்கிமலையில் இருந்து சென்ட்ரல் வரையிலும், மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.



பயணியரின் வசதிகளுக்காக, மெட்ரோ நிர்வாகம், ஷேர் ஆட்டோ, ஷேர் டாக்சி, மாநகர போக்குவரத்து கழகத்தில் சிறிய பேருந்து சேவை மற்றும் பெங்களூரு மெகா கேப்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில், சீருந்து இணைப்பு சேவைகளை வழங்கி வருகிறது.

இந்நிலையில், ஓ.எம்.ஆர்., சாலையில் உள்ள, தொழில்நுட்ப நிறுவனங்களை இணைக்கும் வகையில், சின்னமலை, மெட்ரோ ரயில் நிலையத்திலிருந்து, தரமணி 'டைடல் பார்க்' மற்றும் ராமானுஜம் தொழில்நுட்ப பூங்காவிற்கு, 'ஏசி' வேன்கள் மூலம் மகிழுந்து சேவை, இன்று முதல் துவங்குகிறது.

இதற்கு, 20 ரூபாய் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதேபோல், ஆலந்துார் மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து, டி.எல்.எப்., மென்பொருள் நிறுவனம் வரை, 20 ரூபாய் கட்டணத்தில், குளிர்சாதன மகிழுந்து சேவைகள் பயன்பாட்டில் உள்ளன.